# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2092/10 - 2018 ඔක්තෝබර් මස 08 වැනි සඳුදා - 2018.10.08

*2092/10 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

மாநகர சபை கட்டளை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 188 (1) (கக) பிரிவின் கீழ், வடமேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சருமாகிய குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்க ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, வடமேல் மாகாண காகாண சபை அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள மாநகர சபையின் உறுப்பினர்களுக்காக போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்குரிய விதியை இத்தால் பிறப்பிக்கின்றேன்.*

**டீ. ஜீ. பீ. எம். தர்மசிறி தசநாயக்க,**
வடமேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், பொறியியல் சேவை, நீதி, கல்வி,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக,
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சர்.

வடமேல் மாகாண முதலமைச்சு,
குருநாகல்,
*2018, செத்தெம்பர் 28.*

**மாநகர சபை விதி**

1. இந்த விதி வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள மாநகர சபையில் உள்ள உறுப்பினர்களுக்காக போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய விதியாக அறிமுகப்படுத்தப்படும்.

2. மாநகர சபை உறுப்பினர்களுக்காக சபையின் முறையான பிரேரணை நியமப்படி 3000.00 ரூபாவிற்கு ஆகக்கூடிய அளவிற்கு உட்பட்டு போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்த முடியும்.

3. இந்த கொடுப்பனவு சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியதுடன் அதற்காக வருடாந்த வரவு செலவு மூலம் முன்னேற்பாடு செய்திருத்தல் வேண்டும்.



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. (அ) கீழ் காணப்படும் சந்தர்ப்பங்களில் மாநகர சபைகளில் உறுப்பினர்கள் போக்குவரத்துக் கொடுப்பனவிற்காக உரித்தற்றவராவர்.

(i) கொடுப்பனவு செலுத்துவதற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்திற்கும் செயற்குழுக் கூட்டங்களுக்கு சபையின் அனுமதியின்றி கலந்து கொள்ளலாகாது.

(ii) ஏதாவதொரு குற்றச் செயலுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருத்தல்.

(iii) மாநகர சபைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவின் கீழ் மாநகர சபையின் உறுப்பினர்களின் நடவடிக்கையும் அலுவல்களையும் தடை செய்திருத்தல்.

என்றாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருந்த அல்லது சேவையில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் ஏதேனும் மாதத்தின் ஒரு பிரிவாகும் சந்தர்ப்பத்தில் அந்த மாதத்தின் மிகுதிக் காலத்திற்காக விகித முறைப்படி கணக்குப் பார்த்து இந்தக் கொடுப்பனவு செலுத்தப்படும்.

(ஆ) இந்த கட்டளையின் 4(அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டாலும் உறுப்பினர்கள் கடமைக்காக முறையான அனுமதியுடன் செயற்படும் சந்தர்ப்பத்தில் சபைக் கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமையினால் அவரின் கொடுப்பனவு உரிமையற்றுப் போதலாகாது.

*10- 1248/1*

---

## வடமேல் மாகாண மாகாண சபை

### நகர சபை விதி

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 255 ஆம் அதிகாரமாகிய நகர சபைச் சட்டத்தின் 193 (1) ஆம்பிரிவும் 193 (2)(ஏஏ) உப பிரிவின் கீழ் வடமேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சருமாகிய குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்க ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாண மாகாண சபை அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள நகர சபைகளின் உறுப்பினர்களுக்காக போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்குரிய விதியை இத்தால் பிறப்பிக்கின்றேன்.*

**டீ. ஜீ. பீ. எம். தர்மசிறி தசநாயக்க,**
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், பொறியியல் சேவை, நீதி, கல்வி,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக,
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சர்.

வடமேல் மாகாண முதலமைச்சு,
குருநாகல்,
*2018, செத்தெம்பர் 28.*

**நகர சபை விதி**

1. இந்த விதி, வடமேல் மாகாண மாகாண சபை அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள நகர சபைகளில் உள்ள உறுப்பினர்களுக்காக போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய விதியாக அறிமுகப்படுத்தப்படும்.

2. உரிய நகர சபை உறுப்பினர்களுக்காக சபையின் முறையான பிரேரணை நியமப்படி 3000.00 ரூபாவிற்கு ஆகக்கூடிய அளவிற்கு உட்பட்டு போக்குவரத்து கொடுப்பனவு செலுத்த முடியும்.

3. இந்தக் கொடுப்பனவு, சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியதுடன் அதற்காக வருடாந்த வரவு செலவு மூலம் முன்னேற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

4. (அ) கீழ்க் காணப்படும் சந்தர்ப்பங்களில் நகர சபைகளில் உறுப்பினர்கள் போக்குவரத்துக் கொடுப்பனவிற்காக உரித்தற்றவராவர்.

(i) கொடுப்பனவு செலுத்துவதற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்திற்கும் செயற்குழுக் கூட்டங்களுக்கும் சபையின் அனுமதியின்றி கலந்து கொள்ளலாகாது.

(ii) ஏதாவதொரு குற்றச் செயலுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருத்தல்.

(iii) நகர சபைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் நகர சபையின் உறுப்பினர்களின் நடவடிக்கையும் அலுவல்களையும் தடை செய்திருத்தல்.

என்றாலும், தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருந்த அல்லது சேவையில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் ஏதேனும் மாதத்தின் ஒரு பிரிவாகும் சந்தர்ப்பத்தில் அந்த மாதத்தின் மிகுதிக் காலத்திற்காக விகித முறைப்படி கணக்குப் பார்த்து இந்தக் கொடுப்பனவு செலுத்தப்படும்.

(ஆ) இந்தக் கட்டளையின் 4(அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டாலும் உறுப்பினர்கள் கடமைக்காக முறையான அனுமதியுடன் செயற்படும் சந்தர்ப்பத்தில் சபைக் கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமையினால் அவரின் கொடுப்பனவு உரிமையற்று போதலாகாது.

10- 1248/2

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

பிரதேச சபை விதி

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 184(1) ஆம் உப பிரிவும் 184(1)(ஊ) உப பிரிவின் கீழ் வடமேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சருமாகிய குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்க ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாண மாகாண சபை அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள பிரதேச சபைகளின் உறுப்பினர்களுக்காக போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்குரிய விதியை இத்தால் பிறப்பிக்கின்றேன்.

**டீ. ஜீ. பீ. எம். தர்மசிறி தசநாயக்க,**
வடமேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், பொறியியல் சேவை, நீதி, கல்வி,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக,
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சர்.

வடமேல் மாகாண முதலமைச்சு,
குருநாகல்,
2018, செத்தெம்பர் 28.

### பிரதேச சபை விதி

1. இந்த விதி வடமேல் மாகாண மாகாண சபை அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள பிரதேச சபைகளில் உள்ள உறுப்பினர்களுக்காக போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய விதியாக அறிமுகப்படுத்தப்படும்.

2. உரிய பிரதேச சபை உறுப்பினர்களுக்காக சபையின் முறையான பிரேரணை நியமப்படி 3000.00 ரூபாவிற்கு ஆகக்கூடிய அளவிற்கு உட்பட்டு போக்குவரத்து கொடுப்பனவு செலுத்த முடியும்.

3. இந்தக் கொடுப்பனவு, சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியதுடன் அதற்காக வருடாந்த வரவு செலவு மூலம் முன்னேற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

4. (அ) கீழ்க் காணப்படும் சந்தர்ப்பங்களில் பிரதேச சபைகளில் உறுப்பினர்கள் போக்குவரத்துக் கொடுப்பனவிற்காக உரித்தற்றவராவர்.

   (i) கொடுப்பனவு செலுத்துவதற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்திற்கும் செயற்குழுக் கூட்டங்களுக்கு சபையின் அனுமதியின்றி கலந்து கொள்ளலாகாது.

   (ii) ஏதாவதொரு குற்றச் செயலுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருத்தல்.

   (iii) பிரதேச சபைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபையின் உறுப்பினர்களின் நடவடிக்கையும் அலுவல்களையும் தடை செய்திருத்தல்.

   என்றாலும், தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருந்த அல்லது சேவையில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் ஏதேனும் மாதத்தின் ஒரு பிரிவாகும் சந்தர்ப்பத்தில் அந்த மாதத்தின் மிகுதி காலத்திற்காக விகித முறைப்படி கணக்குப் பார்த்து இந்தக் கொடுப்பனவு செலுத்தப்படும்.

   (ஆ) இந்தக் கட்டளையின் 4(அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டாலும் உறுப்பினர்கள் கடமைக்காக முறையான அனுமதியுடன் செயற்படும் சந்தர்ப்பத்தில் சபைக் கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமையினால் அவரின் கொடுப்பனவு உரிமையற்று போதலாகாது.

10 - 1248/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.